பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

1. சில வேளாண் விளைபொருட்களைப் பொறுத்தவரை வேடசந்தூர் அங்காடியினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 6-1-1990-ஆம் நாளிட்ட 19-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொறுத்தவரை அனைத்து வடிவிலான பச்சைப் பயிறு மற்றும் காராமணி ஆகிய வற்றினை வேளாண் விளைபொருளாக அறிவித்தல் மற்றும் அவற்றின் கொள்முதல் மற்றும் விற்பனையினை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்மைத் துறையின் 15-11-1990-ஆம் நாளிட்ட 850-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

3. உடுமலைப்பேட்டை முறைப்படுத்தப்பட்ட அங்காடியின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 26-11-1990-ஆம் நாளிட்ட 878-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. உடுமலைப்பேட்டை முறைப்படுத்தப்பட்ட அங்காடியின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 27-11-1990-ஆம் நாளிட்ட 884-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23]1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

5. சாமை மற்றும் பொச்சை ஆகியவற்றினைப் பொறுத்தவரை தருமபுரி மாவட்டம் முழுவதையும் அறிவிக்கப்பட்ட அங்காடி பகுதியாக அறிவிப்பது குறித்து 25-1-1991-ஆம் நாளிட்ட 51-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

6. 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரி விதிகளை இயற்றுதல், மேல் முறையீட்டாளர் மற்றும் மதிப்பீட்டாளர்களை நியமனம் செய்தல் ஆகியன குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20-2-1990-ஆம் நாளிட்ட 95-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1990–ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]·

7. சென்னை தமிழ்நாடு கிடங்கு நிறுவனத்தினரால் 1971–72 மற்றும்1972-73–ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தப்பட வேண்டிய மேல் வரி (ரூ.44973)ஐ தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16–11–1990 ஆம் நாளிட்ட 662–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. தேசிய மயமாக்கப்பட்ட சில ஐவுளி ஆலைகளின் மேலாண்மையை மேற்கொள்வதற்கு முன்பு உள்ள காலத்திற்கான செலுத்தப்படவேண்டிய வரி நிலுவையைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11–12–1990–ஆம் நாளிட்ட 713–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

9. 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24–7–1990–ஆம் நாளிட்ட 804–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டுப் [குடிசைப் பகுதிகள் பேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நடத்தை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9–10–1990–ஆம் நாளிட்ட 1233–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

11. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25-9-1990-ஆம் நாளிட்ட 917-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

12. சைதாப்பேட்டை சின்னமலை திருவாளர்கள் மிஷினரிஸ் ஆப்சேரிட்டிக்குச் சொந்தமான டி.என். 07 4960 எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 26-10-1990-ஆம் நாளிட்ட 2365-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

13. தென்னாற்காடு மாவட்டம், வடதொரசலூர் தொழு நோய் மருத்துவமனைக்குச் சொந்தமான சில மோட்டார் வண்டிகளுக்கு வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 29-10-1990-ஆம் நாளிட்ட 2385-ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

14. சென்னை ஜெர்மன் தொழுநோய் நிவாரண நிலைய மறுவாழ்வு நிதிக்கு சொந்தமான மோட்டார் வண்டிகளுக்கு வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 26-3-1990-ஆம் நாளிட்ட 658-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புப் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

15. வேலூர், கரிகிரி ஹெப்லின் தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தினருக்கு சொந்தமான சில வண்டிகளுக்கு வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (ரோக்குவரத்து-அ) துறையின் 17-7-1990-ஆம் நாளிட்ட 1706-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

16. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு தலைவரை நியமனம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 16—11—1990—ஆம் நாளிட்ட 1386—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

17. ஒரத்தநாடு முறைப்படுத்தப்பட்ட அங்காடியின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குதல் குறித்து வேளாண்மைத் துறையின் 6—11—1989—ஆம் நாளிட்ட 836—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

18. திருச்சிராப்பள்ளி, திருவாளர்கள் சேதார் சமையல் எண்ணெய் நிறுவனத்தாரால் செலுத்தப்படவேண்டிய விற்பனை தொகை மற்றும் ஆயத்தீர்வையினை தள்ளுபடி செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 24—1—1991 ஆம் நாளிட்ட 41—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937—ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

19. 1989—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 27—2—1991—ஆம் நாளிட்ட 60—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937—ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடுசட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

20. செய்தித்தாள் மற்றும் காகித உற்பத்தி தொழிற்சாலையினை 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் அட்டவணையில் சேர்ப்பது குறித்து தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 11—1—1991-ஆம் நாளிட்ட 80—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

21. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1991-92—ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1990—91—ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள். [1948—ஆம் ஆண்டு மின் சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

1. 1991—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனம்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1991).

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS